கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த ஆண்டின் முதல் மாதத்தை காணச் செய்த தேவன் இறுதி மாதத்தையும் காண கிருபை செய்துள்ளார். தேவனைத் துதிப்போம். இந்த மாதத்தில் அதிகமாக தேவனுக்கு நன்றி சொல்ல சமயம் எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் ஜெபநேரங்களில் தேவனுக்கு நன்றி சொல்லுவது முதலிடம் பிடிக்கட்டும்.

எல்லாரும் பண்டிகை ஆயத்தங்களில் இருப்பீர்கள். தேவன் உங்கள் தேவைகளை சந்திக்க ஜெபிக்கிறோம். உங்கள் தேவைகளுக்காக நீங்கள் செலவிடும் போது ஏழைகள், திக்கற்றவர்கள், வயோதிபர்கள் போன்றோரையும் நினைவில் வைத்து அவர்களுக்கும் உங்கள் குடும்ப சார்பாக ஏதாகிலும் செய்வதற்கு அவர்களை சந்தோஷப்படுத்துவதற்கு முயற்சி எடுத்து செயல்படுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்ப கொடுப்பார்" நீதி. 19:17. கர்த்தருக்கு யாராலும் கடன் கொடுக்க முடியுமா? என்றால் ஏழைக்கு இரங்குகிறதினால் மாத்திரமே. தேவன் அதை நிச்சயமாய் உங்களுக்கு திரும்பத் தருவார்.

கடந்த மாதம் வரை நாம் நடத்தும் ஒருநாள் முகாம்களில் 13 சிறுவர் குதூகல முகாம்கள், 3 வாலிபர் வெற்றி முகாம்கள், 2 மாணவ ஆலோசனை முகாம்கள், கடந்த மாதத்தில் மட்டும் 4 குடும்பமுகாம்கள் நடைபெற்று முடிந்துள்ளன. தேவனைத் துதியுங்கள். இன்னும் நடைபெற வேண்டிய 7 சிறுவர் முகாம்களும், 17 வாலிபர் முகாம்களும், 8 மாணவர் முகாம்களும், அநேக குடும்ப மனமகிழ்ச்சி முகாம்களும் நமக்கு முன் உள்ளது, ஜெபியுங்கள். இவைகளைத் தாங்குவோர் எழும்ப ஜெபியுங்கள்.

நமது பணித்தளங்களுக்காய் விசேஷமாய் ஜெபியுங்கள். கிறிஸ்மஸ் கால, புதுவருட, ஊழிய நிகழ்ச்சிகளுக்காய் தேவனுடைய சமுகத்தில் மறவாது நினைவு கூருங்கள். ஒவ்வொரு பணித்தளங்களிலும் இந்நாட்களில் புதிய விசுவாசிகள் கிறிஸ்துவின் நாமத்தை அறிவிக்க எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

**வரவேற்கிறோம்:** திருமதி. & திரு. ராமராஜ் பிலிப் தம்பதியருக்கு 21-10-2014 அன்று சுகப்பிரசவத்தில் கீத்தன் சாம்ராஜ் என்ற ஆண் குழந்தையை கொடுத்துள்ளார். குழந்தையை கிருபையின் ஊழிய குடும்பத்தில் வரவேற்கிறோம்.

**கீழ்க்கண்ட ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| டிச. | 6,7 | கன்வென்ஷன் கூட்டம் | WME சபை தூத்துக்குடி |
| | 15 | ஊழியக்கூடுகை | நெல்லை |
| | 20 | உபவாச ஜெபம் | பணகுடி (CSI) |
| | 27,28 | நற்செய்தி கூட்டம் | கணக்கன்குளம் (CSI) |
| | 28 | ஆராதனை | கால்டுவெல்காலனி, (CSI) தூத்துக்குடி |
| ஜன 1 | | புதுவருட ஆராதனை | ஜெகோலியா மிஷன், அவிநாசி |
| | | புதுவருட ஆராதனை | கன்மலை ஜெபவீடு, பெருந்துறை |
| | | மாலை ஆராதனை | நந்தகோபாலபுரம், (CSI) தூத்துக்குடி |

அன்புடன் உங்கள் சகோதரன்

**பா. பொற்செல்வன் ஆசீர்**



# நான் என்ன செய்ய வேண்டும்?

**தொடர் - 74**

**டிசம்பர் 2014**

**ரோமர்**

*தொகுப்பு:* **Dr. B. வில்லியம் தர்மராஜா**

3651 பிறருக்கு இடறுண்டாகப் புசியாதே (14:20)

3652 எதையாகிலும் செய்கிறது உன் சகோதரன் இடறுகிறதற்காவது தவறுகிறதற்காவது, பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மை (14:21)

3653 நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் உன்னைக் குற்றவாளியாக்காதே (14:22)

3654 விசுவாசத்தினால் வராத யாவும் பாவமே (14:23)

3655 பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கு (15:1)

3656 பிறனுடைய பக்திவிருத்திக்கேதுவான நன்மையுண்டாகும் படி அவனுக்குப் பிரியமாய் நட (15:2)

3657 கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே ஏகசிந்தையுள்ளவனாயிரு. (15:6)

3658 கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டது போல, பிறரை ஏற்றுக்கொள் (15:7)

3659 கர்த்தரைத் துதி; அவரைப் புகழ் (15:11)

3660 நற்குணத்தினால் நிறைந்திரு (15:14)

3661 சகல அறிவினால் நிரப்பப்பட்டவனாயிரு (15:14)

3662 புத்தி சொல் (15:14)

3663 தரித்திரருக்குப் பொருள் சகாயம் செய் (15:26)

3664 தேவையிலிருப்போருக்கு உதவுங்கள் (16:2)

3665 நன்றியறிதலுள்ளவனா(ளா)யிரு (16:4)

3666 கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்படு (16:12)

3667 ஒருவரையொருவர் வாழ்த்துங்கள் (16:16)

3668 நீ கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டு விலகு (16:17)

3669 இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் உன் வயிற்றுக்கு ஊழியஞ் செய்யாதே (16:18)

3670 நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சியாதே (16:18)

**1கொரிந்தியர்**

3671 நன்மைக்கு ஞானியும் தீமைக்குப் பேதையுமாயிரு (16:19)

3672 கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே நீ குற்றஞ்சாட்டப் படாதவனா(ளா)யிருக்க வேண்டும் (1:8)

3673 இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிரு (1:9)

3674 பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய சீர் பொருந்தியிருங்கள் (1:10)

3675 சுவிசேஷத்தைப் பிரசங்கி (1:17)

3676 சிலுவையைப் பற்றி உபதேசி (1:18)

3677 சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கி (1:23)

5678 மாம்சமான நீ தேவனுக்கு முன்பாக பெருமை பாராட்டாதே (1:29)
3679 மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேனமை பாராட்டக்கடவன (1:30)
3680 உன் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல; தேவனுடைய பெலத்தில் நிற்பதாக (2:4)
3681 ஊழியக்காரனே! உன் பேச்சும் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நய வசனமுள்ளதாயிராமல் ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிபபடுத்தப்பட்டதா யிருப்பதாக (2:5)
3682 ஆவிக்குரியவனாகிய நீ எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானி (2:15)
3683 உனக்கு கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருப்பதாக (2:16)
3684 நீ மாம்சத்துக்குரியவனாயிருந்தால் உனக்குப் பெலனில்லை (3:2)
3685 பொறாமை, வாக்குவாதம், பேதகங்கள் நீ கொண்டிருந்தால், நீ மாம்சத்துக் குரியவன், மனுஷ மார்க்கமாய் நடக்கிறவன் (3:3)
3686 வேலை செய்; வேலைக்குத்தக்க கூலி பெறுவாய் (3:8)
3687 நீ கட்டினது (அக்கினியால்) பரிசோதிக்கப்படும்போது, நிலைத்தால் கூலியைப் பெறுவாய் (3:13,14)
3688 நீ தேவனுடைய ஆலயம் (3:16); அதைக் கெடுக்காதே (3:17)
3689 உன்னை நீயே வஞ்சியாதே; உன்னை ஞானியென்று எண்ணாதே (3:18)
3690 மனுஷரைக் குறித்து மேன்மை பாராட்டாதே (3:21)
3691 நீ, கிறிஸ்துவினுடையவன் (3:23) என்பதை மறவாதே
3692 ஊழியனே! நீ கிறிஸ்துவின் ஊழியக்காரன் (4:1) என்பதை மறவாதே
3693 ஊழியனே! நீ தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரனாயிரு (4:1)
3694 ஊழியனே! உண்மையுள்ள உக்கிராணக்காரனாயிரு (4:2)
3695 கர்த்தர் வருமளவும் காலத்துக்கு முன்னே யாதொன்றைக்குறித்தும் தீர்ப்புச் சொல்லாதே (4:5)
3696 ஒருவனிமித்தம் மற்றொருவனுக்கு விரோதமாய் இறுமாப்படையாதே (4:6)
3697 நீ பெற்றுக் கொண்டவனானால் பெற்றுக் கொள்ளாதவன் போல் ஏன் மேன்மை பாராட்டுகிறாய் (4:7)
3698 தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது (4:20)
3699 உன்னில் விபசாரம் உண்டென்று சொல்லப்படக்கூடாது (5:1)
3700 நீ மேன்மை பாராட்டுகிறது நல்லதல்ல; கொஞ்சம் புளித்த மா, பிசைந்தமா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியாயோ (5:6)

### பண்டிகை கால வெகுமதி

ஒவ்வொரு ஆண்டும் பண்டிகைக்காலத்தில் நமது மிஷனெரிகளுக்கும் பிள்ளைகளுக்கும் மற்றும் பணித்தளத்திலுள்ள ஏழை மக்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் நாம் உதவி செய்து வருகிறோம். அதற்காக நீங்கள் ஒவ்வொரு ஆண்டும் உதாரத்துவமான காணிக்கையை கொடுத்து வருகிறீர்கள். இந்த ஆண்டு நமது தேவை ரூ. 2½ லட்சம். ஒவ்வொரு ஆண்டையும் போல உங்கள் காணிக்கைகளை அனுப்பித் தாங்க உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.



# மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி

சகோ. S. ஜெபராஜ் President, Grace Ministries

கர்த்தரும் உலக இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் கிறிஸ்து பிறப்பின் நல்வாழ்த்துக்கள். இயேசுகிறிஸ்துவின் பிறப்பே இந்த உலக சரித்திரத்தை இரண்டாகப் பிரித்தது. வயல்வெளியில் தங்கி, இராத்திரியில் தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்த மேய்ப்பர்கள், அவர்களைச் சுற்றி பிரகாசித்த கர்த்தருடைய மகிமையை கண்டு பயந்தார்கள். தேவதூதன் அவர்களை நோக்கி பயப்படாதிருங்கள்; இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை அறிவிக்கிறேன். கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு பிறந்திருக்கிறார். (லூக். 2:10-13) என்று கூறினான். இயேசுகிறிஸ்துவின் பிறப்பு நமக்கு வெளிப்படுத்துகிற காரியங்களை குறித்து தியானிப்பது எவ்வளவு மேன்மையானது.

### 1. இரட்சிப்பை வெளிப்படுத்தும் கிறிஸ்மஸ்

கர்த்தருடைய தூதன் யோசேப்புக்கு செப்பனத்தில் காணப்பட்டு, அவள் (மரியாள்) ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் (மத். 1:20,21) பழைய ஏற்பாட்டின் நாட்களில் இஸ்ரவேல் ஜனங்கள் பிற மக்களின் ஆதிக்கத்தில் அடிமைத்தனத்தில் சிக்கி தவிக்கும்போது தேவன் அவ்வப்போது இரட்சகர்களை அனுப்பி தம் ஜனங்களை மீட்டார். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை மறந்து தோப்புவிக்கிரகங்களைச் சேவிக்கிறபோது கர்த்தர் இஸ்ரவேலின் மேல் கோபமூண்டவராகி அவர்களை மெசொப்பொத்தாமியாவின் ராஜாவாகிய கூசான்ரிஷதாயீமின் கையிலே விற்றுப்போட்டார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபோது, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை இரட்சிக்கும்படி ஒத்னியேல் என்னும் ஒரு இரட்சகனை அவர்களுக்கு எழும்பப்பண்ணினார். (நியா. 3:7-9) எக்லோன் என்னும் மோவாபின் இராஜாவினிடத்திலிருந்து விடுவிக்கும்படி ஏகூத் என்னும் இரட்சகனை எழும்பப் பண்ணினார். (நியா. 3:15) இஸ்ரவேல் ஜனங்களை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கும்படி கிதியோனை எழும்பப்பண்ணினார். (நியா. 6:14). ஒவ்வொரு முறையும் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய கட்டளைகளையும், கற்பனைகளையும் மீறி அந்நிய ராஜாக்களுக்கு அடிமைப்படும்பொழுது மீண்டும் அவர்கள் விடுதலையாக்கும்படி அவ்வப்போது இரட்சகர்களைத் தேவன் எழுப்பினார். ஆனால் அந்த இரட்சிப்பு அவர்கள் வாழ்க்கையில் நிரந்தரமாகவில்லை. இஸ்ரவேலின் இரட்சிப்பு எங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் இருப்பது என்பது மெய்யே (எரே. 3:23). கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடே காத்திருப்பது நல்லது (புல. 3:26) இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் (லூக். 19:10). உலகத்தை ஆக்கினைக்குற்றாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல் அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காவே அவரை அனுப்பினார்.

(யோவா. 3:17). அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய (இயேசு) நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. (அப். 4:12). இயேசுவின் பிறப்பு – பரிசுத்தமான பிறப்பு. இயேசுவின் வாழ்வு – மகா பரிசுத்தமான வாழ்வு. மனுக்குலத்தின் இரட்சிப்பிற்காக தன்னையே இயேசு சிலுவையில் ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தாரே. காரணம் எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று தானே. (1தீமோ. 2:4). இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து கவலை யற்றிருப்போமானால், தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம் (எபி. 2:4). இயேசுவின் பிறப்பு உங்களை பாவத்திலிருந்து இரட்சிக்கவே இலவசமாக கிருபையாக அருளப்படுகிற இந்த இரட்சிப்பை பெற்றிருக்கிறீர்களா? இல்லையெனில் இப்பொழுதே பெற்றுக்கொள்ளுங்கள்.

## 2. அன்பை வெளிப்படுத்தும் கிறிஸ்துமஸ்

இறைவன் மனிதனானார் மனுக்குலத்தின் மீது கொண்ட அன்பினால். தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணில் உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். அவன் ஜீவாத்துமாவானான். (ஆதி. 2:7). "தமது சாயலாக மனிதனை உண்டாக்கி" "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்" (ஆதி. 1:26,27) ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்தது (ரோம. 5:12). நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். (ரோம. 5:8). நான் சிறுவனாயிருந்தபோது, இயேசு எப்படி மனிதனில் அன்பு கூர்ந்தார் என்பதை விளக்கும் ஒரு கதை ஒன்றை வாசித்திருக்கிறேன். ஒருராஜா தன் மந்திரியினிடத்தில் மனிதனை மீட்க இறைவன் ஏன் உலகில் வரவேண்டும்? வேறு யாரையாவது அனுப்பலாமே! என்றும் அதைத்தான் நம்புவதில்லை என்றும் அடிக்கடி கூறுவார். மந்திரி ஒரு காரியம் செய்தார். ராஜாவினுடைய அழகிய சிறிய மகனைப்போலவே ஒரு உருவப் பொம்மை செய்தார். ராஜா படகு சவாரி செய்யும் நதியில் வேறொரு படகில் சில ஆட்களோடு அந்த மொம்மையைக் கொடுத்துவிட்டு. அவர்களிடம் நானும் ராஜாவும் படகு சவாரி வரும்பொழுது ராஜா காணும்படியாக இதை நதியில் போட்டுவிடுங்கள் என்று கூறி வைத்தார். ராஜாவும் மந்திரியும் படகுசவாரி வரும்பொழுது, அந்த மனிதர்கள் பொம்மையைத் தண்ணீரில் போட்டார்கள். அதைப்பார்த்த ராஜா ஐயோ என் மகனை நதியில் போட்டுவிட்டார்களே என எண்ணி சட்டென படகிலிருந்து தண்ணீருக்குள் குதித்து அதை மீட்டார். எல்லோரும் கரையில்வந்து சேர்ந்தபோது மந்திரி கேட்டார், ராஜாவே இது உம்முடைய மகன் என்று நினைத்து, காப்பாற்ற தண்ணீரில் குதித்தீரே, நாங்கள் எத்தனை பேர் இருக்கிறோம் சொன்னால், நாங்கள் காப்பாற்றியிருப்போமே! என்றார். ராஜா கூறினார் : அது என் மகன் அல்லவா? அவன் மீது வைத்திருந்த அளவற்ற அன்பினால் நானே அவனை மீட்கும்படி அப்படி செய்தேன் என்றார். மந்திரி கூறினார் : இதுபோலவே இயேசுவும் தம்முடைய பிள்ளைகளை பாவத்திலிருந்து இரட்சிக்கும்படி, தன்னையே



ஒப்புக்கொடுத்து இந்த உலகில் வந்து, பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து மீண்டும் உயிரோடே எழும்பினார். தம்முடைய அன்பை வெளிப்படுத்தினார். இவ்வளவாய் அன்பு கூர்ந்தார். (யோ. 3:16). அவர் தமது அன்பினிமித்தம், தமது பரிதாபத்தினிமித்தம் அவர்களை மீட்டு, பூர்வ நாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கி சுமந்து வந்தார். (எசா. 63:9). மனுஷரைக் கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகளால் நான் அவர்களை இழுத்தேன் (ஓசியா 11:4). கிறிஸ்து நம்மில் அன்புகூர்ந்தது போல (எபே. 5:2). பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன் (யோ. 15:9). தன் ஜிவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை (யோவா. 15:13). நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்ட அவனிடத்தில் இயேசு அன்புகூர்ந்து உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு என்பதாய் சுட்டிக்காட்டுகிறார். (மாற். 10:21). தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார். (எபே. 2:4,5). கிறிஸ்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள். (எபே. 5:2). தன் சகோதரனில் அன்பு கூராமலிருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல. நாம் ஒருவரிலொருவர் அன்பு கூரவேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது. (1யோ. 3:11). என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும், உண்மையினாலும் அன்பு கூரக்கடவோம். (1யோ. 3:18). பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்பு கூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூரக் கடனாளிகளாயருக்கிறோம். (1யோ. 4:11). நீங்கள் அன்பிலே வேரூன்றி நிலைபெற்றவர்களுகளாகி கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ளுங்கள். (எபேசி. 3:17,18,19)

## 3. தியாகத்தை வெளிப்படுத்தும் கிறிஸ்மஸ்

கிறிஸ்துமஸ் என்றால் கொடுத்தல் அன்பு கூர்ந்தால் கொடுக்காமலிருக்க முடியாது. கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையாக காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்தார். (எபே. 5:2). இனி நாடோறும் பலியிட வேண்டுவதில்லை. ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரே தரம் செய்து முடித்தார். (எபி. 7:27). இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே, அந்தத் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். (எபி. 10:10). அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை. இவைகள் மன்னிக்கப்பட்டதுண்டானால், இனிப் பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்படுவதில்லையே' (எபி. 10:17,18). இயேசு நமக்காகத் தம்மைத்தாமே தியாகபலியாக ஒப்புக்கொடுத்தது இயேசுவின் தியாகமல்லவா? தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. (யோவா.

15:13). இயேசுகிறிஸ்து இந்த உலகில் மனிதனாய் அவதரித்ததின் நோக்கத்தை நிறைவேற்ற தன் ஜீவனையே கொடுத்தார். பாவ மனுக்குலம் இவ்வுலகத்தில் பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுவதற்காகவே. இயேசுகிறிஸ்துவின் தியாகத்தின் பலனை அனுபவிக்கிற தேவ பிள்ளைகளாகிய நீங்கள் உலகிற்கு வெளிப்படுத்தும் படியாக எதை, எவ்வளவு தியாகம் செய்திருக்கிறீருகள். தேவையுள்ள மனிதர்களுக்கு தாராளமாய் உதவி செய்யுங்கள். தேவனுடைய ஊழியங்களுக்கு உங்கள் நேரத்தையும், திறமையையும் தாலந்துகளையும் செல்வங்களையும் அர்ப்பணியுங்கள். மனுக்குலம் பாவத்திலிருந்து இன்னும் மீட்கப்பட வேண்டுமே என்கிற தாக்கம் உங்களில் இந்த கிறிஸ்மஸ் நாட்களில் உதயமாகட்டும். பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பை தரித்துக் கொள்ளுங்கள். (எபேசி. 4:14). கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சி உங்கள் வாழ்நாள் முழுவதும் தொடரும்.

உங்கள் அனைவருக்கும் எங்கள் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்.


**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**

*தேவனுடைய கூடாரத்தில் திறப்பின் வாயில் ஜெபமும் ஸ்தோத்திர முகாமும்*

**2014 டிசம்பர் 31 , கடைசி புதன் – காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

*தேவசெய்தி :* **சகோ. பிரபாகர்** கெத்சமெனே, பாவூர்சத்திரம்

**சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**

கிருபையின் ஊழியங்கள், தூத்துக்குடி

**நீங்களும் வாருங்கள்!** **கலந்து கொள்ளுங்கள்!**

**இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!**

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை–626 201. போன் 04562–258194


## *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும். நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.



# STAYING STRONG IN A SINFUL WORLD

**Dr. P. Selvaraj,** Pollachi

With bitter : Sin is the ultimate addition

Ray C. Stedman : Sin never dies of old age; With smug, dogmatic certainty, Job's friends conclude that Job is afflicted because he has committed a terrible sin (God sometimes uses tragic or painful circumstances to get our attention when we have wandered away from Him... When we violate the law's of God's universe, our bodies will have to pay the price in poor health and even intense suffering.. also, bad things happen to good people)

**2Peter 2:7-8 (NLT) :** God rescued Lot out of Sodom because he was a **righteous** man. Lot was **sick** of the shameful immorality of the wicked people around him. He was tormented in his soul by the wickedness he **saw** and **heard** day after day.

**1Corinthians 5:9-10 (NLT) :** Paul told the believers not to **associate** with people who indulge in seccual sin. He wasn't talking about unbelievers Believers can't avoid people like that. Can they?

**Malachi 2:15b-16 (NLT) :** We should **guard** our heart for staying strong in a sinful world.

**Matthew 15:19 (NLT) :** Evil thoughts, murder, adultery, seccual immorality, theft, lying and slander come from our **heart.** 1Peter 1:13 (NLT): We should think **clearly** and exercise **self - control.**

## HOW TO KEEP OUR HEART RIGHT?

1. Identifying people by their actions. We can identify a tree by its fruit. Be diligent about people who are likely to influence the way you think, the way you speak and the way you live. If sinners entice us, we should not give in to them, - Matthew 7:20; Proverbs 1:10.
2. If we break God's laws Jesus will disown us on the judgement day ... Through the law we become conscious of sin. - Matthew 7:23; Romans 3:20b.
3. Refusing to let world corrupt us. Religion can't help us in this. When we refuse to let the world corrupt we're following a pure and genuine religion in the sight of God. Jesus warned his disciples to be on their guard against the yeast of the Pharisees, which is hypocrisy. - James 1:27; Luke 12:1b.
4. Thinking clearly and exercising self - control. Our hope is in the gracious salvation that will come to us when Jesus Christ is revealed to the world. We will only be filled with the fruit of our schemes. - 1Peter 1:13; Proverbs 1:31b.

## தசமபாகம் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ளதா?

இந்தக் கேள்வியை அநேகர் கேட்கின்றனர். தசமபாகம் என்ற வார்த்தையை புதிய ஏற்பாட்டில் முதன்முதலாக பயன்படுத்தினவர் இயேசு கிறிஸ்துவே. மத். 23:23, லூக். 11:42, லூக். 18:12 ஆகிய மூன்று இடங்களில் இயேசு தசமபாகத்தை குறித்து பேசுகிறார். இந்த மூன்று இடங்களிலும் தசமபாகம் கொடுக்க வேண்டியதில்லை என்று இயேசு சொல்லாமல் கொடுக்கிறவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்க வேண்டும் என்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார். எனவே இயேசு தசமபாகத்திற்கு விரோதமானவர் அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் தசம பாகம் கொடுக்கும் தேவ ஜனங்கள் நீதியையும், இரக்கத்தையும், விசுவாசத்தையும், நியாயத்தையும், தேவஅன்பையும் அதோடு இணைத்து வழங்க வேண்டும் என்றும் தேவனோடு நீதிமான் என்ற உறவுள்ளவர்களாய் கொடுக்க வேண்டும் என்றும் சுவிசேஷத்தில் இயேசு சுட்டிகாட்டுகிறார். தசம பாகம் கொடுப்பது பலன் பெறுவது நமது ஆவிக்குரிய வாழ்வின் பெலனைக் பொறுத்தது. நீதியை தவறவிட்டு, இரக்கத்தை மறந்து, விசுவாசத்தை மறுதலித்து, நியாயமற்ற வாழ்க்கை வாழ்ந்து, சம்பாதித்து, தேவ அன்பை இழந்து கொடுக்கும் தசமபாகம் தேவனால் அங்கீகரிக்கப்படுவதில்லை என்பதை இயேசு கிறிஸ்து சுவிசேஷத்தில் உணர்த்துகிறார். நீதியற்ற நியாயமற்ற வருமானம் தேவனுக்கு அருவருப்பு என்பதை மறவாதிருங்கள்.

புதிய ஏற்பாட்டில் மேலும் எபிரேயர் 7:2, 4:8,10 ஆகிய வசனங்களில் தசம பாகம் கூறப்பட்டுள்ளது. எபிரேயர் நிருபத்தை ஆக்கியோன் இங்கே தசமபாகத்தை குறித்து நிருபத்தில் குறிப்பிடுகிறார். வேறு எந்த நிருபங்களிலும் தசமபாகத்தை குறித்த வசனங்களை நாம் காண முடியாது. எபிரேயருக்கு எழுதின நிருபம் 2ம் தலைமுறை ஆதிகிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்ட நிருபம். நிருபத்தை ஆக்கியோரும் ஆதித் திருச்சபையில் 2ம் தலைமுறை ஊழியர்கள் என்றே கருதப்படுகிறது. ஆகையினால் தசமபாகம் கொடுக்கும் பழக்கம் திருச்சபைக்கு இருந்ததினால்தான் ஆதித்திருச்சபியின் இந்த நிருபத்தில் இதைக்குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதிலே யார் யாரெல்லாம் கொடுக்க வேண்டும் என்ற கேள்விக்கு பதில் உள்ளது. தசமபாகம் வாங்குகிற லேவியும் தசமபாகம் கொடுத்தான் என்று சொல்லப்படுகிறதினால் தசமபாகம் வாங்குவோரும் தசமபாகம் கொடுக்க அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற மற்றும் ஓர் உண்மை இங்கு உறுதியாக நிலைநாட்டப்படுகிறது. வாங்க அழைக்கப்பட்டவர்கள் ஒரு சாரார். கொடுக்க அழைக்கப்பட்டவர்கள் மற்றவர்கள் என்கிற எண்ணத்திற்கு இங்கு விடை காணப்படுகிறது. ஆகையினால் புதிய ஏற்பாட்டின்படி நாம் தசம பாகம் கொடுக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். மட்டுமல்ல. தசமபாகம் வாங்குவோரும் தசமபாகம் கொடுக்க அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற சத்தியத்தை புரிந்து செயல்பட நாம் அழைக்கப்படுகிறோம்.

*தொகுப்பு :* சகோ. B. பொற்செல்வன் ஆசீர்

கேள்வி பதில் தொடரும்



## *தூத்துக்குடியில் ஸ்தோத்திர முகாம்*

**நாள் : 2014 டிசம்பர் 30 – கடைசி செவ்வாய்**

**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

**இடம் : காமராஜர் திருமண மண்டபம்,**
பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.

*தேவசெய்தி :* **சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**

## பணித்தளங்களில் சந்திக்கும் கிராமங்களுக்காய் ஜெபியுங்கள்

**ஞாயிறு**

**விருதுநகர் மாவட்டம்**

பணித்தளம் : **சாத்தூர்ரூரல்**

சாத்தூர்
வாழவந்தான்புரம்
ஒத்தையால்
ஓ. மேட்டுப்பட்டி
ஆலம்பட்டி
அணைக்கரைப்பட்டி
ஸ்ரீரங்கபுரம்
நடுச்சூரங்குடி

**திங்கள்**

பணித்தளம் :
**புல்லக்கவுண்டன்பட்டி**

புல்லக்கவுண்டன்பட்டி
ஜெகவீரன்பட்டி
விளாமரத்துப்பட்டி
கண்ணக்குடும்பன்பட்டி
சங்கரபாண்டியாபுரம்
மஞ்சள் ஓடைப்பட்டி
வல்லம்பட்டி
பனையடிப்பட்டி
புல்லக்கவுண்டன்பட்டி காலனி
கோட்டைப்பட்டி
கொம்மங்கியாபுரம்
சூரார்பட்டி
மேலப்புதூர்

**செவ்வாய்**

**நெல்லை மாவட்டம்**

பணித்தளம் :
**திருவேங்கடம்**

திருவேங்கடம்
சாமிநாதபுரம்
முத்துரெட்டிபட்டி
ஊமைதலைவன் பட்டி
வெள்ளாகுளம்
செல்லம்பட்டி
மேலான்மறைநாடு
ஆவுடையார்புரம்
சத்திரப்பட்டி
சங்குபட்டி
சின்னக்காளான்பட்டி

**புதன்**

பணித்தளம் : **அத்தியூத்து**

சிறுக்கன்குறிச்சி
கருவ நல்லூர்
சத்திரம்
ஆண்டிப்பட்டி
அகரம்
புதூர்
சீதற்ப நல்லூர்
அத்தியூத்து
சோலைச்சேரி
கருவந்தா

**வியாழன்**

பணித்தளம் : **அழகப்பபுரம்**

அழகப்பபுரம்
திருமலாபுரம்
செம்பாடு
இந்திராநகர்
கீக்குளம்
பெருமளஞ்சி
தளபதி மேட்டூர்
அருளானந்தபுரம்
வள்ளியம்மாள்புரம்

**வெள்ளி**

**தூத்துக்குடி மாவட்டம்**

பணித்தளம் :
**ஸ்ரீமூலக்கரை**

திருப்புளியங்குடி
இசவன்குளம்
தோழப்பண்ணை
மொட்டமச்சி
ஸ்ரீ மூலக்கரை

**சனி**

பணித்தளம் : **தட்டப்பாறை**

கீழத்தட்டப்பாறை
மேலத்தட்டப்பாறை
கேம்ப் தட்டப்பாறை
தெற்கு சிலுக்கன்பட்டி
வடக்கு சிலுக்கன்பட்டி
உமரிக்கோட்டை
சொக்கலிங்கபுரம்
வரதராஜபுரம்
செட்டியூரணி